**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 54/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | வனிதா |
| Father's Name/Husband Name: | ராஜா |
| Village : | அத்தியூர் |
| Taluk : | குன்னம் |
| Age : | 45/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.06.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி மாயவேல் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1யை எனக்கு தெரியாது. எதிரி மாயவேல் எனது மாமனார். சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 03.07.2024ம் தேதி மதியம் 2 மணியளவில் முத்தமிழ்ச்செல்வியிடம் எனது மாமனார் வாய்த்தகராறு செய்து கொண்டிருந்ததை நான் சத்தம் கேட்டு விசாரித்தேன் என்றும் அப்போது எனது மாமனார் அ.சா.1ன் ஆடு பயிரை மேய்ந்துவிட்டதாக சொல்லி ஆபாசமாக அ.சா.1யை பேசி அவரை இழுத்து கீழே தள்ளி

கையிலிருந்த மூங்கில் தடியால் தலையிலும், இடது பக்க கழுத்திலும் அடித்துவிட்டார் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எனது மாமனார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.